செ.வெ. எண்: 299 நாள்: 19–05–2012

# பத்திரிக்கைச் செய்தி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள அங்கன்வாடிப் பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களில் 11,432 பணியிடங்களை நிரப்பிட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மாவட்டத்தில் உள்ள காலிப்பணியிடங்கள் விபரம் குறித்து அறிவிப்பு வெளியிட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அங்கன்வாடிப் பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களுக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பம் செய்யலாம். 10 வகுப்பு தேர்ச்சி பெற்று, 25 – 35 வயதுவரம்பிற்குள் உள்ள விண்ணப்பதாரர்கள் அங்கன்வாடி பணியாளர் மற்றும் குறு அங்கன்வாடி பணியாளர் பணியிடத்திற்கும், 20–40 வயது வரம்பிற்க்குள் உள்ள தமிழ் எழுத படிக்கத் தெரிந்த விண்ணப்பதாரர்கள் உதவியாளர் பணியிடத்திற்கும் விண்ணப்பம் செய்யலாம்.

மேலும், தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்படாத ஊதிய விகிதத்தில் அங்கன்வாடிப் பணியாளர் பணிக்கு ரூ.2500–5000+ தரஊதியம் 500/– என்ற விகிதத்திலும், குறு அங்கன்வாடி பணியாளர் பணிக்கு 1800–3300+ தர ஊதியம் 400/– என்ற விகிதத்திலும், உதவியாளர் பணிக்கு 1300–3000 + தரஊதியம் 300/– ஏன்ற ஊதிய விகிதத்திலும் உரிய படிகளுடன் வழங்கப்படும்.

விண்ணப்பம் வழங்கும் நாள், விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள், நேர்முகத் தேர்வு நாள் மற்றும் இதர விபரங்கள் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தனியே அறிவிப்புகள் வெளியிடப்படும். சென்னை மாவட்டத்திற்கு முதன்மைச் செயலர் மற்றும் சிறப்பு ஆணையர் அவர்களால் தனியே உரிய அறிவிப்புகள் வெளியிடப்படும்.

மேலும், உரிய விண்ணப்பங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இணையதளமான www.icds.tn.nic.in லிருந்தும் பணிநியமனம் தொடர்பான அறிவிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முதன்மைச் செயலர்/சிறப்பு ஆணையர், அவர்களால் அறிவிப்புகள் வெளியிட்ட பின்னர் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

வெளியீடு: –

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.